Registered No. M—253.

அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

புத்தகம்—I. | 1902 ஞ் ஜனவரி மீ 10-உ. திருவனந்தபுரம். | இலக்கம்—12.

விஷயங்கள்.

சுதந்திரம் :—(ஓர் தனிப்பாடல்) T. M. J.
அன்பு :—D. S.
திராவிட மஹா பாஷியம் :—பத்திராதிபர்.
உமாபதி :—P. N. சுப்பிரமண்ணிய பிள்ளை. B. A.
எரிமலை :—பண்டிதர். A. K. கிருஷ்ணையங்கார்.
விதிமதி :—இலக்ஷ்மணப் போற்றிகள்.
பிங்கல நிகண்டு :—அ. குமாரசாமிப் புலவர்.
விச்ரஹ ஆராதனை :—இலக்ஷ்மணப் போற்றிகள்.
செல்வியாள் :—பண்டிதர். A. K. கிருஷ்ணய்யங்கார்.
சமாசாரக் குறிப்புகள்.

பத்திராதிபர்.
☞ வள்ளல். சோ. சிவஞானதேசிகர்.

நாகர்கோயில் விக்டோரியா பிரஸில் பதிப்பித்து
திருவனந்தபுரத்தில் வெளியிடப்படுகின்றது.

ஜீவருஷ சந்தா ரூ. 2.] 1901. [பத்திரிகை அணா 4.

முக்கிய கவனிப்பு.

இப்பத்திரிகையின் முதற்புத்தகம் இதோடு நிறைவேறிற்று. இதன் 2-வது புத்தகம் பெப்ரவரி மாதத்தோடாரம்பம்பெறும். ஒருவருடமாக நமது பத்திரிகை பெற்று மகிழ்ந்து வந்த நண்பர்கள் சிலர், வருடம் முடிந்தும், இன்னும் தமது கையொப்பத்தொகையை அனுப்பி எம்மை மகிழ்வித்து பத்திரிகை நடத்துவதில் எமக்கு ஊக்கம் பிறப்பிக்காமல் இருக்கின்றார்கள் என்பதை நண்பர்களுக்குத் தெரிவிக்க மிக நாணுகின்றோம். பத்திரிகை நடைபெறுவது அபிமானிகளின் திரவிய சகாயம் பற்றியதன்றோ. பதினோராவது இலக்கம் வெளிப்படுவதன்முன் பத்திரிகையைப் பெற்று அதன் கிரயத்தை யனுப்பாதவர்களுக்கு அவ்விலக்கப் பத்திரிகை வி. பி. பி. வழி யனுப்பப்படுமென்று ஏற்கனவே பலதடவைகளில் விளம்பரஞ் செய்திருந்தாம். அதனைப் படித்துணர்ந்தும், எமக்கு வரக்கடவ தொகையை அனுப்பாத பேர்களுக்கு நாம் குறிப்பிட்டிருந்தபடி பதினோராவது இலக்கத்தை வி. பி. பி. வழியாக அனுப்பினோம். பெருக்குணத்தார் சிலர் அங்ஙனம் அனுப்பப்பட்டவற்றைப் பெற்றுப் பணமும் அனுப்பத் தடைசெய்தனர். மற்றையர் சிலரோ பத்திரிகையைப் பெறாது மறுத்துவிட்டனர் என்பதை வெளியிட வெட்கமும் துக்கமும் அடைகின்றோம். இத்திறத்தார் யாதுகருதி நமது பத்திரிகையை இதுகாறும் பெற்று அநுபவித்தனர் என்பது யாமுணரவல்லேம் அல்லேம். அவர் தன்மைக்கு இரங்கற்பாலேம். நன்மனமுடைய நண்பர்கள் எவரேனும் ஏக்காரணத்தாலேனும் இதுகாறும் பத்திரிகைக் கிரயத்தை யனுப்ப தாழ்த்திருப்பாராயின் தயைசெய்து உடன் அனுப்பித்தருமாறு பிரார்த்திக்கின்றோம். பணத்தை அடியிற்கண்ட விலாசத்திற்கு அனுப்புக.

ம. ள. ள. ஸ்ரீ. சு. கணபதிப் பிள்ளையவர்கள், உண்டியல்கடை,
சாலை பசார், திருவனந்தபுரம்.

இங்ஙனம்,
வள்ளல், சோ. சிவஞானதேசிகர்,
பத்திராதிபர்.

சமாசாரக் குறிப்புகள்.

திருவிடை மருதூர்.

திராவிட மஹாபாஷியத்தைப் பற்றி மற்றோரிடத்துக் கூறியுள்ளோம். திருவாவடுதுறை ஆதீனத்திற்கோர் பேரணியென விளங்கும் அப்பாஷியம் சமயோசிதங்களிற் கூடிய வித்வ கோஷ்டியில், ஆதீன குருமூர்த்திகளால், ஒவ்வொரு பாகங்கள் விரித்தெடுத்து விளக்கிப் பிரசங்கிக்கப்படுதலுண்டு. அங்ஙனம் நாளது ஜனவரி மீ 27, 28 உ இரவுகளில், சித்தாந்த சைவப் பெருஞ்செல்வரும், வித்வ சிகாமணியும், கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களால் மேம்பட்டவரும் ஆகிய இராமநாதபுரம் சேதுபதி மஹாராஜா அவர்களோடுகூடி விளங்கிய வித்வசபைக்கண், நங்குரவர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகளால் இம்மஹா பாஷியத்தினின்று "வேதாக தாரதம்மியம்" என்னும் விஷயம் ம

அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

புத்தகம்—I. | 1902 ஆம் ஜனவரி மீ 10-உ. திருவனந்தபுரம். | இலக்கம்—12.

FREEDOM.

சுதந்தரம்.

மாயிரு ஞாலம் ஆய்ந்து நனி வேட்ட,
அறம்பல வளர்த்தும் திறலர சளித்தும்
இலங்கு, நற்றாயே! இயங்கிடு வாயுவே
நிற்றகைக் குவமையாச் சொற்றனர் சான்றோர்.
இவண்மிகு சிறப்பெலா நினதருட் டிறமே!
நாடுகள் சிறந்து நற்பொலி வடைதலும்;
பாடுகெ ணீங்கிநற் பாடுகுடி யெய்தி
யரசர் மாட்டன்பு பெருகலும்; அடிமைகள்
நேரமர் புரிந்து பாழ்ங்கோற் பழிநுகம்
பேர்த்துப் பெருமை பெறுதலும்; ஒப்புயர்
விகந்த விறைமை யுணர்த்துஞ் சமய
கோடிகள் தழைத்துக் கூடி யோங்கலும்;
பன்னூற் பெருக்கமு நின்னரு ளலவோ?
மன்னுயிர் மனத்துறை யரசி!
நீங்கா விளமையி லோங்குக மிகவே!

T. M. J.

அன்பு.

நமக்குரிய கடமைகளிரண்டு. அவை: அருட்டிறம் பூண்டு, உலகு புரந்து, உயிர்களுக்கழிவில் பேரின்பம் நல்கும் இறைமாட்டு அன்பு செலுத்துங் கடப்பாடு ஒன்று; மற்றொன்று, ஒருவன் தன் மாட்டு அன்பு கூருமாபோலத் தன் சகபிராணிகளிடத்தும் அன்பு கூரற் பாலதாய இயல்முறை. ஆகவே, மக்கட் பிறப்பினர்க்கு உற்ற கடமை அன்பு கூர்தல் என்ற வொன்றி லடங்கிற்று. கடவுள் மாட்டுச் செய்யப்படும் அன்பு பக்தி எனப்படும். யான் ஈண்டுக் கூறுவான் எடுத்துக் கொண்டது ஏனையது. அஃது ஜீவகாருண்யம் எனப்படும். அக்குணம் உயிர்க்கு இன்றியமையாப் பண்பாம். அன்பின்றி உயிர்வாழ்க்கை யில்லை யென்பார்போல நமது நாயனார், "அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண் வற்றன் மரந்தளிர்த்தற்று." என்று நமக்கு வற்புறுத்துக் கூறுகின்றார்.

அன்பு எனப்படுவது யாதெனின், ஆன்மாவில் உண்டாகும் ஓர் உருக்கம் அல்லது நெகிழ்ச்சியாம். நாயனாரும் "அருளென்னு மன்பீன் குழவி" என்றாராதலின் அன்பின் பயனாய் விளங்குவது அருள். அன்பு அருள் என்னு மிவ்விரு குணங்களும் உலகில் மனையாளோடிருந்து இல்லறம் வளர்ப்பாரும், உலகப்பற்றொழித்துத் துறவறம் புரிவாருமாகிய இருதிறத்தார்க்கும் இன்றியமையாதனவாம். அவற்றி னிலக்கணமாவன: எல்லா வுயிரையும் தன்னுயிரைப்போல நேசித்தலும்; பிறவுயிருக்குத் துன்பநேர்ந்த காலத்து அதனை நீக்கப் பரிந்து செல்வதும், இரங்குவதும்; துன்பறுதல் கண்டவிடத்து மகிழ்தலும்; தன்னை நாடி வந்தாரை முகம் மலர உபசரித்தலும்; உபகரித்தலும்; பிறர் செய்த நன்றியை மறவாதொழுகலும்; பிறர் குறைபொறுத்தலும்; அவர் குற்றங்களை யெடுத்துத் தூ

ற்றுமையும்; பிறரது கல்வியுயர்ச்சி, செல்வவுயர்ச்சி, பெருமை யுயர்ச்சியாதிகளைக் கண்டழுக்கருது உள்ளத்து உவத்தலும்; யாவர்க்கும் பயன்றருவனவாகிய இன்சொற்களையே உயர்ந்தோர், ஒத்தோர், இழிந்தோரிடத்துக் கூறியறம் வளர்த்தலும்; பகைவர், அயலார், நட்பினர் என்னும் பேதமின்றி யாவரையுஞ் சமநோக்கிற் கண்டு நடுநிற்றலும்; தீயசெயல்களைச் செய்யாதொழிதலும்; பிறர்க்கு நன்மாதிரி காட்டலும்; நன்னெறிக்கண் அவரை யுய்த்தலும்: உலக நடையை அறிந்து தமது கல்வி, செல்வம், பொருள், சரீர மிவை யாவருடைய உபகரிப்புக்கும் பொதுவாக அமைத்தலும்; மனத்தில், வாக்கில் உண்மைநிகழ, எக்காலும் பொய்மை ஒழித்தலும் ஆகிய இத்தகைய செயல்களே அன்பின் இயல்களாம்.

ஆகையால், அன்பு எங்கே குடியிருக்கின்றதோ அங்கே எல்லா அறங்களுங் கூடியிருக்கக் காணலாம். அன்பினாலேயே இப்பிரபஞ்சங் கட்டுண்டிருக்கின்றது. அன்பின் கட்டிலேயே உலகியல் நடந்தேறுகின்றது. அன்பே ஒற்றுமையை ஆதரிக்கின்றது. அன்பே பரோபகார சிந்தையைத் தருக்கின்றது. அன்பே பொது நன்மையைச் செய்விக்கின்றது. அன்பே நீதிச்சட்டங்களை யேற்படுத்துகின்றது; துன்மார்க்கங்களை யொழிக்கின்றது. அன்பே சமாதானத்தை நிலைநிறுத்துகின்றது. அன்பே எல்லாச் சுதந்தரங்களையும் அளிக்கின்றது. அன்பே உண்மைஞானங்களை வளர்க்கின்றது. அன்பின் பெருமைகளை நன்காராயின் அதுவே சகலநன்மைகட்கு மூலமென நனி விளங்கும். அன்பு எங்கே தலைப்படுகின்றதோ அங்கே எல்லா அறங்களும், எல்லா வளங்களும், எல்லா மாட்சிகளும் ஓங்கி வளர்வன. அன்பு செய்தலினாலே அன்பில்லாக் கடினசித்தரிடத்தும் அன்பை விளைத்தல்கூடும். அன்பினாலே தீமைகளையும் தீக்குணங்களையும் ஒழித்தல்கூடும். பகைவர்களையும் கோபிகளையும் நேசமாக்கும் வன்மையுடையதும் அன்பே யாகும்,

பவுல் யோகி ரோமர்க்கெழுதின நிருபத்தில் (13. அதி. 8. வச.), 'எவன் தன் அயலானை நேசிக்கிறானோ அவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்'' என்கிறார். அன்பிலே எல்லா அறங்களுங் கட்டுண்டிருக்கின்றன என்பதை இவ்வாக்கியம் புலப்படுத்துகின்றது. பிறர்க்கு நாம் செலுத்தவேண்டும் கடமைகளுள் நமது அன்புக்கு முதல் பாத்திரமாவார் நமது தாய்தந்தையர். ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.'' இறைவன் ஸ்தானத்திலிருந்து நம்மை இவ்வுலகத்திற் பெற்றுவளர்த்து ஆதரித்தவர்களும், நம்மை யத்தியந்தம் நேசித்தவர்களும் அன்பென்னுங் குணத்தை நமது உள்ளத்தில் முதல் முதல் உருப்பெறச் செய்தவர்களு மவர்களே; அவர்களிடத்து நமக்குள்ள கடப்பாடு என்றும் மறக்கற்பாலதன்று. அதனாலே ஒளவையார் "தந்தைதாய்ப் பேண்" என்று நமக்கு உபதேசிக்கின்றார். பேணுதலாவது அவர்களை நேசித்து சங்கித்தலும, அவர்களுக்கு வேண்டும் பணிவிடைகளைச் செய்தலும், இடுக்கண்காலத்தும், தளர்ந்தபருவத்தும் ஊன்றுகோல்போல நின்று உதவுதலும், நமது நல்லொழுக்கத்தால் அவரைப் பெருமைப்படுத்தலும் ஆம். பெற்றோர்களே! உம் பிள்ளைகளுக்கு அழகைத்தர ஆபரணங்கள் வேண்டப்படுவன வல்ல. அவர்கள் அகத்தின் அழகு அன்பென்னுங் குணத்தால் அமைவது. உங்கள் குழந்தைகட்குப் பாலூட்டும் போதே அன்புக்குணமும் அவர்கள் உள்ளத்தில் மூளை யரும்பச் செய்யுங்கள். இளமையிலேயே அன்பு என்னும் பயிர்க்குக் களையாகியத் 'துர்க்குணங்களை அவர்களிடத்துக் களையுங்கள். உம் ஒழுக்கமு குணமும் உம் பிள்ளைகளின் ஒழுக்க குணங்கட்கு வரிச்சட்டமுங் கருக்குகையு மாவன. அவரை நன்னெறிக்கண் ஒழுக்கலும், வித்தையில் அபிவிர்த்திசெய்வித்தலும், உலகத்தோடொத்து வாழும் இயல்பினராக்கலும் உம்மேல் நின்ற பாரம். அங்ஙனம், மக்கண்மாட்டு மெய் அன்பும் அருளுமுடையீரேல், அவர் உமக்

கு இம்மைமயில் பெரும் "பேறு" ஆவர்; அன்றியும், கண்டோர் "இவன் றந்தை என்னோற்றான் கொல்" என்று சொல்லும்படியான பெரும்புகழையும் உமக்கு இசைவிப்பர்.

தாய்தந்தையரைப் பேணுமுறையே அவரிடமாய் அமைந்துள்ள பெரியோரையும் பேணுதல் நமது கடமையாம். அவருள் முதல்வர் ஆவார் ஞானசிரியர் அல்லது குருக்கண்மார். அவர் தமக்கென வன்றிப் பிறர்க்கென வாழும்பெற்றியர். அன்பின் மேலீட்டால் தம்மை மறந்தனராய்; தம்மை யடைந்தாரது சுக துக்கங்களையே தமவாகப் பாவிப்பவர். தம்மவர் ஆன்ம லாப மொன்றனையே கருதி, நல்லுபதேசஞ்செய்து, தமது செய்கையால் ஏனையோரையு நல்வழிப்படுத்தலால், அன்னோரை நேசித்தலும், வழிபடலும், அவர் ஏவினவழி நிற்றலும், தொண்டுபுரிதலும், அவர்க்கு ஊண், உடை, மருந்து அளித்து ஆதரித்தலும், நமக்குக் கடனும். அவ்வாறே நமது போதகாசிரியர் அல்லது உபாத்தியாயர்கள் மாட்டும் அன்பினால் நாம்பிணிக்கப்படுகின்றோம். நமது அறிவுவளர்ச்சிக்கும் சன்மார்க்க எழுச்சிக்கும் அவர் காரணர் ஆவர். "எழுத் தறிவித்தோ னிறைவனாகும்" என்ற நம் முன்னோர் வாக்கியம் உபாத்தியாயர்களிடத்து மாணாக்கராகிய நமக்குள்ள அன்பின் கடப்பாடு யாதென அறிவுறுத்துகின்றது.

இன்னும், அரசாங்கத்தாரிடத்தும் எஜமானர்களிடத்தும் அன்புகூர்தல் யாவர்க்கும் ஏற்பட்ட கடமையாம். முன்னையோர் நமது காவலாளராய் நமக்கு நன்மை யியற்றுபவர். பின்னையோர் நமக்கு அன்னதாதாக்களாகிய உபகாரிகள். அரசாங்கத்தாரிடத்து நாம் அன்புபாராட்டல் யாங்ஙனமெனின், அரசியல் குடிகளின் காவலின் பொருட்டாதலால் நீதிபரிபாலனத்துக்கு என்று ஏற்பட்ட ஆணைநெறிநின்று, ஒற்றுமையையும் தருமத்தையும் உடன்பரிபாலித்து, காப்புத்தொழில் இடையூறின்றி நடத்தற்காக ஏற்பட்டுள்ள வரிகளை முறையே யிறுத்துத், தேசக்ஷேமத்தைக் காத்து

வருதலாகிய கடப்பாட்டைக் கைகொண்டு ஒழுகுதலாம். அரசாங்கத்தாரும் குடிகளின் சுகபரிபாலனத்தைக்கருதி அவர்மாட்டு அன்புகூர்வாராதல்வேண்டும். அரசாட்சியின் ஒவ்வொரு பகுதித்தொழிலாளரும் தங்கள் நன்மைக்காகவன்றிக் குடிகளின் நன்மைக்காக ஏற்பட்டவர்களாதலை யுணர்ந்து, ஜனங்களை வாதிப்பவராயிராமல் ஆதரிப்பவராய் இருக்கக்கடவர். வேலைக்காரரும் ஊழியரும் தம் எஜமானரிடத்து அன்புகூர்ந்து தமக்கிட்ட பணியை இகழாது செய்து எஜமானரைச் சந்தோஷிப்பிக்கக் கடவர். எஜமானர் தங்கள் ஊழியர்பால் அன்புடையாராய் அவர்களது அசட்டையால் குற்றம் நேரிட்டால் தண்டித்தல் அன்றி அவர் தெரியாமற் செய்த குற்றங்களிற் பராமுகமுடையராய், அவர்க்குரிய கூலியைக் குறைக்காதிருக்கக் கடவர்.

மெய்யான அன்பு கிரியையிலே விளங்குவது. பெரியாரிடத்து அன்பு எங்ஙனம் விளங்கிற்று என்று காண்மின். பாண்டவர்கள் ஒட்டியநாள் அவதி கழிந்தும் தந்நாடு பெறுமையின், போர்புரிந்து அதனைப் பெறுக என்று நட்டார் கூற; யுதிட்டிரன்.—பிறவுயிர்கட்கு இடுக்கண்விளைத்து நாட்டைப்பெற்று அரசு புரிவதிலும், ராஜபோக மிழந்து காட்டில் வசித்து, காய்கனிகளைத் தின்று நாட்கழிப்பது நலமென்று கூறும்படி அவன் மனத்தை வலியுறுத்தியது அன்பன்றி மற்றியாது? போரின் கடைநாள் துரியோதனன் தனக்குள்ளன வெல்லாமிழந்து தனியுத்தத்திற்கு வீமனோடு இசைந்து குறித்தவிடநோக்கிச் செல்லுங்கால், யுதிஷ்டிரன் அவனை யணுகி, தம்பி! இதுவரை நடந்தபோர் போதும், உயிர் மாய்த்தல் வேண்டா. அரசாட்சியை நடத்த மனம் ஒவ்வுக. யாங்கள் உன்கீழ் அடங்கிவாழ்வம் என்றனன். அன்பின் கிரியையை என்னென்பேம்! இன்னும், "அன்புடையார் என்பு முரியர் பிறர்க்கு" என்னும் மெய்ம் மொழிக்குச் சான்றுகள் எத்துணைய!!

அன்பென்னும் அருமையரான செல்வத்தையுடைய பரம புருஷர் எவரோ அவரே இகத்திலும் பரத்திலும் சுகத்தை யடைவர். அச்சாதுகளுக்கே இகமும் பரமும் உரித்தானவை. அன்பு எவ

சிடத்திருக்கின்றதோ அவரை யா
வரும நேசிக்கின்றார். அன்புடை
யவருக்கே எல்லா வுலகத்தோரு
ம் வசியப்படுவர். அன்புடையாரே
எவ்விடத்தும் சிறப்பினை யடை
வர். தாம் எண்ணியபடி எல்லா
க் கருமங்களையுஞ் செயதுமுடிக்
க வல்லவ ராவர். அன்பில்லாதவ
ரோ தொழிற் குதவாது பருத்து
நீண்ட ஒகியை ஒத்தவ ராவர். அ
ன்பற்ற சிந்தையார் காயாத மர
த்துக்கும், ஈறுதமலடிக்கும், ஊற்
றில்லா பாறைக்கும், கசக்கும்
எட்டிக்கும் சமமாவர். அவர் ம
னம் நிமனம்; அவர்க்குப் பகை
ஞரே விசேடம். அன்பற்றவர் உ
ள்ளத்தில் அருள்விளக்கம் காணு
தல் அத்திமலரைக் காணுதல்
போலுமாம்.

அன்பானது நமக்கு இன்றி
யமையாத முக்கிய பொருளாம்.
உலகில் பணமின்றி, உணவின்றி
உடையின்றி, மனைவி மக்களின்றி,
மாடுவீடுகளின்றி, பெருமை கல்
வியின்றி, இருப்பினும் இருக்கலா
ம்; அன்பின்றி யிருத்தல் கூடா
து. அன்பாகிய நித்திய செல்வ
மானது பொன், வெள்ளி முத
லிய விலையுயர்ந்த லோகங்களினு
ம், முத்துப் பவள முதலிய மணி
களினும் சிறந்துள்ளது. எவ்வகை
மேம்பாட்டையுந் தரவல்லது அ
ன்பெனின், சிற்றறிவுடைய யா
னோ அதன் பெருமையை யுரைக்
க வல்லேன். சுருக்கிச்சொல்லின்
அன்பானது நமக்கெவ்வளவு ஆ
வசியமான குணமென்றால், அஃ
தின்றி மற்றைத் தருமங்களனைவ
யும் மாட்சிப்படுவனவல்ல.

அன்பர்காள்! இத்தகைய அன்
பினை நாம் பெறுவிடின் இம்மை ம
றுமைகளில் பெருமையையும் பே
ற்றையு மடைவதெங்ஙனம்? எவ
ன் தன்னுயிர்போல மன்னுயிரை
நேசிக்கின்றானோ அவன் நீதி
யை நிறைவேற்றுவா னுவன். எ
வன் அன்பினை யாளுகின்றானோ
அவன் எல்லோரையு மாளுகின்ற
வனுவான். எவன் அன்பினை வ
ளர்க்கின்றானோ அவன் எல்லாரு
டைய அன்பிலும், அன்புற்ற சிந்
தையிலும் வளர்கின்றவ னுவான்.
அன்பைப்போல சிறந்ததொன்று
எவ்வுலகத்தினும் இன்று. அப்ப
ண்பினை யாம் சதா பழகவேண்டி
யது இன்றியமையாதது.

D. S.

326

திராவிட மஹாபாஷியம்.

திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறையாதீன பரமசற்குரு மூர்த்திகளுட் டலைமை பெற்றோங்கிய ஸ்ரீ மத் மெய்கண்ட தேவர் அருளிய பன்னிரு சூத்திரங்களானியன்ற "சிவஞான போதம் என்னும் பெரிய நூலுக்கு, அவ்வாதீன முனிவர் குழாங்களுட் சிறந்த ஸ்ரீ சிவஞானயோகிகள்' தற்காலம் சைவசித்தாந்திகள் பயின்று வருவதாகிய சிறந்ததுந் தெளிந்ததுமான சிற்றுரை ஒன்று எழுதி உபகரித்ததுடன், சித்தாந்த சாஸ்திரத்தின் நுட்பப் பொருள்களையெல்லாந் தெள்ளிதில் விளக்கி "திராவிடமஹாபாஷியம்" என்னும் பெயரால் அகலவுரையொன்று தாம் பிறந்து வளர்ந்த தமிழ் நாட்டிலுள்ளார்மீது கொண்ட கருணை மேலிட்டால் இயற்றித் தந்தனர்

எங்ஙனம் வள்ளுவப்பயன் நீதி சாஸ்திரங்களுட் சிறந்ததோ, அங்ஙனம் சித்தாந்த சாஸ்திரங்களுள் இது தலைமைத்து. இவ்விருநூலுக்கு மிணையுலகில் எங்கணும் எப்பாஷையினும் இல்லையென்பர் ஆன்றோர். இத்திராவிட மஹாபாஷியமே சித்தாந்த சைவமஹாபாஷியமாம். கற்ப சூத்திரபாஷியங்களுள் நீல கண்ட சிவாசாரியர், தம் பெயரா னியற்றிய பாஷியமொன்றினை, அஃது "சமவாத" பக்ஷம் என்று தெரிந்து கொள்ளமாட்டாத சில்லோரி சைவசித்தாந்த பாஷியமாகவே கொண்டு மயங்கா நிற்பர். அஃது இச்சித்தாந்த மஹாபாஷியத்தின் மகிமையைத் தெரிந்து கொள்ளாச் சிறுமையே.

இம் மஹாபாஷியம் விரிந்து அகன்று பொருள் ஆழ்ந்து நிரம்பிய தாய்ச் சித்தாந்தக் கடல் என்று சொல்லத்தக்க பெரியதோர் நூல். இஃது திருவாவடுதுறை ஆதீனத்திற்கு ஓர் தனிப்புதையல் போலுமுள்ளது. அவ்வாதீனத்தார் இப்பாஷியத்தை பரம்பரை உபதேசத்தால் கற்றுணர்ந்து இறுமாந்துள்ளார். தம்மை யாசிரயிக்கும் சிஷ்யவர்க்கத்துக்கும், அவர்பக்குவத்திற் கேற்ப இந்நூலின் ஒவ்வோர் பகுதிகளை அவ்வாதீனத்தார் ஓதுவிப்பதும் மரபு. உலகிற் சிறந்த நூல்களுள் ஒன்றென மதிக்கத்தக்கதும், தமிழ் மதத்தின் மகிமை இத்துணைத்தென்று பிறர்க்கு, உணர்த்தத்தக்கதுமாகிய. அரிய பெரிய இப்பாஷியம் இன்னுங் கரந்து நின்று உலவுமியற்கை பல்லோரும் வருந்தற் பாலதாம்.

உமாபதி.

இரண்டாம் அதிகாரம்.

பிறந்த அக்குழவிக்கு மட்டுவார்
குழலாளெனப் பெயர் சிறீஇப், பின்
னர்க் கலியாணன் தொன்று தொட்டு
வரும் வழக்கத்துக் கேற்பக் காப்பிட
வேண்டி பதினொருநாள், ஓர் நற்பொழு
து குறீஇ, அன்பர், கிளைஞர், அனைவ
ரையுங் கூய், அந்நனம் வந்து குழீஇ
ஞர்க்குக் கடன் முறைசெலீஇ யமரு
மெல்லை, அரசன் மனையாட்டி, மட்டு
வார் குழலாளைப் பட்டாடையிற் பொ
திந்து, அக்குழார்த்தினடுவண்சரப், பொ
ற்கொல்லரும் புரிந்து பொற்காப்பிட்
டனர். இன்னணமாகக், கலியாணன்,
தன் பிறவியைக் கையிலேந்திக் கிழ
மையோர் கையிற்றந்து வாழ்ந்த வெ
ன, அன்னொருவொருவர் " பெண்மணி!
நீடுழிவாழ்க; உமாபதியும் வாழ்க. நீ
விரிருவரும் நமக்கிணையில்லை யென்
னும் வண்ணம் வாய்த்தீர்" என்று
வாழ்த்தித் தந்தனர். அக்கூற்று, கூற்
றுப்போல, அன்னம்மையின் காதினு
ளேற, அது பொறுது, அவள் வெட்
டெனப்பாய்ந்து, " இதோ! பாருங்கள்,
உங்களைத்தானே,—குழந்தையை வா
ழ்த்தியது போதும்" என்றுரக்கக்
கூவிக் கலியாணன் கையிலிருந்த மக
வை தனக்கெனப் பறித்து, இல்லின்
கடைப்புறஞ் சென்று, " இருக்கட்டு
ம்; எங்கேயோ கிடக்கிற பயலுக்கு
என் குழந்தையா? நல்லது, நல்லது,
பார்ப்போம்!" என்று பல பிதற்றி ஆ
ரவரிக்க, பார்த்தோரெல்லாம் பதை
பதைக்கக், கலியாணன், தனக்கு வந்
த மானக்கேட்டை நினைத்து நினைத்து
அகங்கன்றி முகங்குன்றி நின்ற விட
த்தே குந்திவிட்டான். ஆண்டிருந்தோ
ரொருவாறு அவனைத் தேற்றியுந் தே
றுனாய், அவரை நீத்து உட்கட்டுக் கே
கி, " அடியே!—உன்"—என்று சொ
ல்லத் தொடங்கினான். அதன் முன்
னே அவ்வடங்கா மடந்தை வெகுண்
டு, " யாரைப் பார்த்து 'அடி' யென்
கிறீர்! ஏது தெரியவில்லை!" என்றாள்.

கலியாணன், தன் மனக் கொவ்
வாத் துணையைப் பெற்றுளானேனும்,
அகத்துக்கேடு புறத்துத் தோன்ற வண்
ண மிதகாறுங் காத்துவந்தவன், தக்
கண மின்னணம் நேர்ந்ததைப்பார்த்து,
" அம்மணி, என்னை! உனக்கேழகோ?
நீ, இவ்வூருக்கோர் தலை மகள் அல்லை
யோ? இக்குறை யுனக் கேற்குமா?
பார்த்தவர் நகையாடுவரே" என்று
பலவாறு கூறியும், அவை பாறை
மேற் பெய்த மாரிபோ லாட்புகாதொ
ழிய, அன்னம்மை, " அந்தக் கிழவன்
பிதற்றுவதை யெல்லாம் நீர் கேட்டுக்
கொண்டுதானே யிருந்தீர்" என்றாள்.

அதற்கவன், " சொல்லுகிறவர்
சொன்னால் உனக்காவதென்ன? நான்
அப்படிச் சொன்னேனோ? குளம் பெ
ருகுமுன் தவளை கும்மாளிபோட்டது

போலும் நீ நினைப்பதுஉம், செய்வதுஉம்; அதற்குள்ளே வுனக் கிவ்வளவென்ன; உனதெண்ணப்படியே நடத்திக் கொள்ளுவோம்" என்று சொல்லிப் பின்னுமவள் மூர்க்கம் அடங்காமை நோக்கி, அவணீத்துத்தன்னறையிற் புக்கான்.

புகலும், அவனது தலைமைக்கணக்கன் முத்தையன் எனுமோர் வடமொழியாளனும், அவன் பிற்சென்று நுழையக் கலியாணனவனை நோக்கி,- "ஓய், முத்தையரே! பார்த்தீரா? நாம் 'எல்லோரையும் விருந்திற் கழைத்தோமே, குலக்கேடி எவ்விதம் பொல்லா மொழிகளைப் பேசி எங்கே மானபங்கப்படுத்தி விடுவளோ! என்று நினைத்தேன். நினைத்தது போல நடத்தினளே; இனி யென்ன செயற்பாலது? ஐயரே, வந்தவரனைவருஞ் சென்று விட்டனரோ? உமாபதி யெங்கே? தாயம்மாள்! உன் குழந்தையை யவளென்னபாடு படுத்தினளு நானுன்னுடன் பிறந்தேனன்றே, நானொருநாளு முன் பிறவியைக் கைவிட மாட்டேன்" என்று பேசி,—மறுபடியு முத்தையரை நோக்கி, "ஓய்! ஐயரே! இடிவிட்டதா? இன்னு மிரைந்த வண்ணந் தானிருக்கின்றளோ? ஐயையோ! என் தங்கை இறந்து போனது முதல், ஒருவருக்கு மஞ்சாது, பையனை யென்னபாடு படுத்திக் கொண்டுவருகின்றள்! தெய்வமே, மானத்துக் கஞ்சியிவளைத் தண்டிப்பது நன்றன்றெனத் தவிர்த்தேன். இதுகாறும் நமதரண்மனைக்குள்ளேயே யிருந்து கொண்டிருந்த இந்நாற்றமின்று வெகுதூரஞ் சென்றுறைத்து விட்டதே!" என்று பலவாறு புலம்பிப், பின்னர், தானிருக்கு மிடநோக்கி யோடி வரும் உமாபதியைக் கண்டதுமொருவாறு தானே தன்னை யாற்றிக் கொண்டு, பயலை மடிமேலிருத்தி, உச்சிமோந்தனன்.

பையன், "மாமா, புள்ளை, இங்கு, இங்கிண்ணு அழுது" என்று மழலையோடு பேசக் கலியாணன் அவனை முத்தமிட்டு, "அப்படியா அழுது, சரி, அப்பன்! வீரப்பனையெங்கே" என்று உமாபதியைக் கேட்டான்.

இவ்வீரப்பன் உமாபதியுடனிருக்கவும், காலைமாலை வெளியே வுலாவுக்குக் கொண்டுபோகவு மாகக் கலியாணனு லேற்படுத்தப்பட்டவன். இவன் பையலைத் தன் மகவ்போற் பாவித்து அரசனிலு மிக்க அன்புடன் பாலித்து வந்தனன்.

அரசன், உமாபதியை வீரப்பனெங்குச் சென்றனனெனக் கேட்டதும் உமாபதி, "நான்—அவனங்கே நின்னுன்; நான், ஓ—டிவந்திட்டேன்" என்றான். இதற்குள்ளாக வீரப்பனு மங்குவர, பையனைக் கவலையுடன் நோக்கு வண்ண மவற்கானை வைத்து அவர் களிருவோரையும் விடுத்தனன்.

எரிமலைகளின் அடியில் மிக்க கொதிப்புடைய நீர்ப்பிரவாகம் வெளிப்பட இடம் பெறுமல் கட்டுண்டிருக்கின்றது. அஃது அதன் பக்கங்களிற் கிடக்கும் பாறைகளைத் தன் உஷ்ணத்தினால் பொடிப் பொடியாகச் சிதறடித்து விடுகிறது. இப்பொடிகள் வெடிப்பு வாய்களின் வழியாய் எரி எறியுண்டாகும் போது வெளியில் கொண்டுவரப்படுகின்றன. இவை உருவமும் ஒளியும் உடையனவாயிருத்தலால் இவற்றை ஆபரணங்களாக நேப்பில்ஸ் தேசத்தார் உபயோகித்து வருகிறார்கள். இவற்றிற்கு "லவஅணி" என்று பெயர். இவை பாதாள லோகத்தில் இயற்கையால் சமைக்கப்பட்டிருந்தும் பொற்கூடத்தில் செய்யப்பட்டுப் பூலோகத்தார்க்கு அணிவதற்காக ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. இவற்றை நமக்குக் கொண்டுவந்து தருவது நீராவி எனும் வர்த்தகன். நம் முன்னோர்கள், புராணங்களில், நாகலோகத்திற் சென்று நாகரத்தினங்களைப் பலர் கொண்டுவந்தார்கள் என்று கூறியிருப்பது இந்த "லவரத்னாபரணங்களைச்" சுட்டியே யிருக்கலாம் எனத் தோன்றுகிறது. இத்தகைய அரதன ஜாலங்கள் விசூவிஸ் முதலிய செயலுடை மலைச் சார்புகளிலும் செயலில் மலைச்சார்புகளிலும் ஏராளமாய்க் கிடைக்கின்றன.

பூமியின் புறத்தட்டிற்குக் கீழிருக்கும் நடுத்தட்டிலிருந்து மேற்றட்டுக்குக் கொண்டுவரப்படு மித்தகைய பொருகளு ளெல்லாவற்றிற்கு மேலான பொருள் ஒன்றுண்டு. இவற்றிற்கு "லவம்" (lava) என்று பெயர். இவை நமது செங்கற் காளவாய்களிற் சுடப்படும் நன்றாய் வெந்துபோன செங்கல் போலிருக்கும். ஒன்றோடொன்று வேற்றுமையின்றிக் கலந்து பாய்ந்து ஒன்றாய்த் திரண்ட பல கற்பொடிகளாலாகிய செங்கலைப் போலவே இந்த 'லவங்களும்' பல பொருட்களைச் சேர்த்து உருக்கி வார்க்கப்பட்டிருக்கின்றன.

இந்த லவங்களில் என்னென்ன பொருள்கள் சேர்ந்திருக்கின்றன என்பதை விசாரித்தறிவோம். தனிப்பொருள்கள் ஏறக்குறைய எழுபதுண்டென்று தற்காலம் மதித்தறியப் பட்டிருக்கின்றன. இவற்றுள் 'லவத்தில்' காண்பவை சிலவே. எட்டுத் தனிப்பொருள்கள் சாதாரணமாய் எல்லா 'லவத்துண்டிலும்' சேர்ந்திருக்கின்றன. அவையாவன: (1) அனல்வாகி (Onygem) (2) சிகிமுகி (Silicon or flint) (3) லகுவெண் பொன் (Aluminium) (4) காந்தவாகி (Magnesium) (5) சுண்ணவாகி (Calcium) (6) கரும்பொன் (iron) (7) மங்கு வெண் பொன் (Sodium) (8) பைக்கீறு (Potau-

sium) இவற்றுள் சில பேரளவிலும் சில சிற்றளவிலும் காணப்படுகின்றன. எல்லா லவமும் பாதிக்குமேல் "அனல்வாகி" யாயிருக்கும் மற்றப் பொருள்களும் அனல்வாகியோடு கலந்தே இருக்கின்றன. இவ்விஷயம் லவத்தின் குணமறிவதற்கு முக்கியமானது. நாலிலொருபங்கு சிகிமுகியும் (Silicon) பத்திலொருபங்கு லகுவெண்பொன்னுமாயிருக்கும். மற்றத் தனிப்பொருள்கள் ஏகதேசம் சமமாய்க் கலந்தவளவிலிருக்கும்.

லவங்களின் கட்டு வேறுபாட்டால் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு பெயரிட்டுப் பகுத்துக் கூறிவருகிறார்கள். அவற்றை விரிக்கிற் பெருகும். ஆதலின் அவற்றிற் புகாது விடுவேன்.

லவங்களிற்பல இருளடைந்திருக்கும் (Opaque) ஆயினும் இவற்றிலிருந்து ஒளி அறியும்படியான துண்டுகள் வெட்டி யெடுக்கப்படுகின்றன. சிற்றுரு விளக்கியின் உதவியால் இச்சிறு துண்டுகளின் அமைப்பு சோதித்தறியப்படுகிறது. இவ்வறிவு பாறைகள் உண்டாகும் வழியைத் துலக்குகின்றதற்கு மிகவும் உதவியாயிருக்கிறது.

லவத்துண்டுகளில் மிக்க வற்றையும் நம்உலைகளிலிட்டுருக்கலாம். சில உருகுவதற்கு வெகு நேரஞ்செல்லும், சில அதிவிரைவிலுருகும். சிகிமுகி (Silica) குறைந்திருப்பவை மற்றவற்றைவிட சீக்கிரம் இளகுகின்றன என்றறியப்பட்டிருக்கின்றன.

ஆயினும் செயற்கையாலுருக்கப்படும் லவங்கள் இயற்கையில் உருகிக் குளிர்ந்த லவங்களின் தன்மையிலிருந்து வேறுபாடுடையதாயிருக்கின்றது. இவ்வுண்மை நன்றாய்க் கவனிக்கப்படவேண்டும். ஒரு துண்டு லவத்தை எடுத்து உடைத்துப் பார்ப்போமாயின் அதில் முறையாய்ப் பதிக்கப்பட்டிருக்கும் பற்பல உருவமுடைய ஸ்படிக சாலங்களைக் (Crystals) காணலாம். இவற்றுள் சிலது மிகச் சிறிதாயிருப்பதால் கண்ணுக்குப் புலப்படாது. சில ஒன்றும் அதிகமும் அங்குலம் பருமனுடைத்தாயிருத்தலால் அவற்றினுருவம் பார்ப்போருக்கு நன்கு விளங்கும். லவங்களில் மிக்கவையும் ஸ்படிக சாலங்களால் அமைந்திருக்கின்றன வென்பது இத்தகைய சோதனையால் தெரியலாகும். இந்த ஸ்படிகங்களின் நிறவேறுபாட்டால் இவை அனைத்தும் ஒரே விதமான சன்னங்களால் ஆக்கப்பட்டனவல்ல என்பதும் நன்கு தெளியும்.

நமது உலைகளில் உருக்கப்படும் லவங்களிப்படியாகா அவையனைத்தும் ஒரே நிறமுடையதாய் விடுகின்றன. ஸ்படிக சாலங்கள் நாசமுற்று கண்ணாடியாய் விடும்.

லவத்தைப்பற்றி கூறவேண்டிய அதிசயங்கள் பலவுண்டு. அது தவிர்

தே ஒரு உபன்னியாசமாம். மற்ற விஷயங்கள் சில கூறுதொழிவது இவ்வுபன்னியாசத்திற்குப் பெருங் குறையாம் ஆதலால் இம்மட்டில் இதனை நிறுத்தி விட்டு அடுத்த விஷயத்திற்குப் போகிறேன்.

விசுவியஸ் மலையின் எரி எறி சக்தியின் பெருமையையும் தொடர்ச்சியையும் அறிந்தபின் இம்மலை உலகத்திலுள்ள எரிமலைகளில் மூன்றாந்தரமானதென்று சொல்லக் கேட்டால் கேட்போர்க்கு அதிசயம் பிறத்தல் சகசமே. ஆயினும் இஃது உண்மைதான். இம்மலையைவிட உயரமும் கனமும் உள்ளளவும் இடையளவும் ஊக்கமும் அநேக மடங்கு பெரிதான மலைகள் வேறு சிலவுண்டு. இம்மலைக்கோரே எறிவாய்தான் உண்டு. மூன்றெறிவாய்களை யுடையன சில முன்னிருந்திருப்பதுண்டு. அவை இப்பொழுது தொழிலின்றி அடங்கிக்கிடக்கின்றன. இவை காம்பீர்யத்தில் மும்மடங்கு விசுவியஸ் மலைக்கு மேலான தென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. எட்னு மலை இதிலிருபது மடங்கு அதிகப்பருமனுடையதாம். அதனிடத் துண்டாகும் எறிக்காட்சி இதினும் 200 மடங்கதிகமான வியப்பை விளைக்கும். நேப்பில்சுக்கும் தேன்டஸ் கணிக்கும் இடையிலுள்ள கரை யோரமாயிருக்கும் பற்பல எரிமலைகளிற் சில இப்பொழுது தளர்ந்து ஊக்கமழிந்து கிடக்கின்றன. அவற்றுள் பிராக்கியானோ என்றும் பால்சேனு என்றும் இரண்டுண்டு. இம்மலைகளின் எரி எறி வாயாயிருந்த விடம் இப்பொழுது பெரிய ஏரிகளாயிருக்கின்றன. இவை உயிருடையனவாயிருந்த காலத்தில் விசுவியஸ் மலைக்கு மகிமை சிறிதும் கிடைத்திருப்பதற்கிடையில்லை. பால்சேனுவின் எரி எறிவாய் இப்பொழுது 40 சதுர அடிவிரிவுள்ள ஓர் ஏரியாயிருக்கிறது. விசுவியசின் வாய் ஆறுமைலுக்கதிகம் என்றும் விரிந்திருப்பதில்லை. பிராக்கியானோவின்வாய் பால்சேனுவின் வாயைவிட மிகச் சிறிதுதான். ஆயினும் விசுவியசின் வாயைவிட மிக விரிவுடைய தென்பதற்குச் சந்தேகமில்லை. இவ்விருமலைகளும் தங்கள் யௌவன காலத்தில் ராக்ஷஸர்களாயிருந்தன. ஆயினும் இடீரென்று அவற்றின் சக்தி முழுதும் எப்படியோ போயிற்று. அவற்றின் வாயின் விரிவுக்குத்தக்கபடி ஏராளமான பொருள்களை வெளிக்கக்கித் தம்மைச் சுற்றி மலைக்குவியலை வளர்ப்பதற்குத் தருணம் வாய்க்கு முன்னமே அவற்றிற்குத் தளர்வு நேரிட்டு விட்டது.

ஐரோப்பாவில் புடை பெயர்ச்சியுள்ளதும் புடைபெயர்ச்சி யின்று தளர்ந்தடங்கியதும் ஆக அநேகம் எரிமலைகளுண்டெனினும், முதற்றரமான எரிமலைகளைக் காணவிரும்புவோர் மற்றக்

கண்டங்களுக்குத்தான் போகவேண்டும். வெடிப்பின ஊக்கத்தாலும் பொருள் வெளிப்பாட்டின் அளவினுலும் எல்லா மலைகளுக்கும மேலானவையாயிருக்கும் எரிமலைகளைக் காணவேண்டுமெனில் ஐசிலண்டிலும் மலையன் பிரதானத் தீவுக்கூட்டத்திலும் காணலாம், ஐசிலண்டில் ஸ்காப்டர் என்ருேர் பருவதமுண்டு. அம்மலையில் 1783-ம் வருஷத்திலுண்டான ஒரு எரி வெடிப்பில் அம்மலையினுள்ளிடத்திருந்து பொங்கி எதிவாய் வழியாய் வெளிப்பட்டு ஒழுகியோடிய லவப்பிரவாகம், விசூவியஸ், எட்ன எனுமிரண்டு மலைகளின் வழியாய் அவை தொழிற்படத் தொடங்கிய காலமுதல் கக்கியிருக்கும் லவத்தொகுதியைப் பார்க்கிலும் மிகப் பெரிதாயிருந்ததெனச் சரித்திரங் கூறுகிறது. இம்மழுப்பிரவாகத்துடன் வெளிப்போந்த காசத்தொகுதியும் அப்படியேயிருந்தது. அன்றெழும்பிய கரிப்பொடிகளின் கூட்டம் ஆகாயத்திலெழும்பிப் பரந்து ஐரோப்பா முழுதும் சூரிய ஒளிகாணுதபடி மறைத்தது. ஜனங்கள் ஏதோ பெரிய உத்பாதம் நேரிடும் போலிருக்கிறதென அஞ்சினுர்கள், ஐசிலண்டு ஒரு சிறிய தீவாயிருந்ததேனும் அங்கு நேரிட்ட உயிர்ச்சேதம் மிகப்பெரிது. பயிர் எல்லாம் அழிந்து போயிற்று. பஞ்சம் அத்தீவைக் கவர்ந்து கொண்டது. கடலிற்கிடந்த பெரிய மீன்களெல்லாம் அங்கிருக்கமுடியாமல் கரைகளிலோடிப் பாய்ந்தன. இத்தீவு இத்தகைய எரிஎதிகளிலிருந்துண்டான பொருளின் சேர்க்கையால் உண்டாயிருக்கிறது. அடிக்கடி இம்மலை வெடித்து அத்தீவின் விரிவைப் படிப்படியாய்ப் பெருக்கிற்று. 1783-ம் வருஷமுண்டான சம்பவத்தைப்போல் எத்தனையோ சம்பவங்கள் அங்குண்டாயிருப்பதுண்டு. ஒவ்வொரு காலத்திலும் கற்பொடிகளை வாரி எறிந்து வடஅத்லாந்திக் மகாசமுத்திரத்தில் திட்டுக்களை யுண்டாக்கி அவற்றின் அளவைப் பெருக்கியிருக்கிறது.

இக்காட்சியை 18-வது நூற்றுண்டிலிருந்த ஜனங்கள் மதித்த மாதிரிக்கும் பிற்பாடுண்டாகிய கிராகீகட்டோவா வெடிப்பைப் பத்தொன்பதாவது நூற்றுண்டிலிருந்த ஜனங்கள் மதித்த மாதிரிக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிவது முக்கியம். 1883-ம் வருஷத்தில் கிராங்கரோடவா வெடிப்புண்டது. அதிலிருந்தும் கரிப்பொடிகளும் நீராவித்திரளும் பெருந்தொடர்ச்சியாய் புறப்பட்டன. அப்பொழுதும் அருணோதய காலத்திலும் அஸ்தமன காலத்திலும் செம்மத்தாட்புக் கொளுத்தினுற் போன்ற ஒளி எங்கும் பரவிற்று. 18-வது நூற்றுண்டிலிருந்தவர்கள் இவற்றைக்கண்டு பயந்தார்கள். அக்காலத்தில் அறிவிற் சிறந்தவரென மதிக்கப்பட்டிருந்த கூப்பர்மகாகவி அக்காட்சியைக் கண்டு கடவுளின் கோபத்தால் உண்டான ஓர் பெரிய உற்பாதம் எனமதித்திட்டார்.

விதிக்கு மதிக்கு முள்ள வேற்றுமை.

விதியாவது என்னை? மதியாவது என்னை? விதியென்பது ஒவ்வொரு ஜீவனும் தான் தான் செய்த கருமத்தினுக்குரிய பயனை யடைதற் பொருட்டு மேலான கர்த்தரால் விதிக்கப்பட்டதோர் தீர்ப்பு எனப் பொருள்படுகின்றது. இவ்விதியானது கடவுள் தம் இச்சைப்படி ஏற்படுத்தப்பட்டதோ ஒருவன் செய்தவினையை நிதானித்து அவராற் செய்யப்பட்ட தீர்ப்போ என்பதனை விவகரிக்கப்புகின் ஐயமறத் தெளிதல் கஷ்டமாகின்றது. ஆகிலும், கடவுள் ஒருவர் உளரோ இலரோவென வாதுசெயப்புகின், ஆஸ்திகரும் நாஸ்திகரும் தாந் தாம் காட்டுகிற நியாயங்கள் சமபலத்தன வாயிருக்கின்றனவென ஒருவாறு வைத்துக்கொண்ட போதிலும் யுக்திவாத மொன்று ஆஸ்திக பட்சத்தை யாதரிப்பதற்கு ஏற்பட்டிருப்பது போல மதிக்கு வலிமை கொடுப்பதற்கான நியாய மொன்றிருக்கலாம் அதனை ஆராய்வாம்.

கடவுளின் உண்மைக்குரிய யுக்திவிவாதம் யாதெனில், ஆஸ்திகரது கொள்கையாவது இவ்வுலகத்தை விட்டுப் போன உயிர்கள் கடவுள் சந்நிதானத்திற்குச் சென்று அவராலிடப்படும் தீர்ப்பிற்கு உட்படவேண்டு மென்பது. நாஸ்திகர் கொள்கையாவது ஆன்மா இவ்வுலகத்தைவிட்ட பின்னர் ஜடப்பொருளாகிய இச்சரீரத்தோடு மாய்ந்துவிடுகிறதென்பது. ஆயின் நாஸ்திகர் கூறியபடி இவ்வுலகத்துக்குப் பின்னர் யாதொன்று மிலதாமெனின் இருதிறத்தாருக்கும் ஏகபயனேயன்றி வேறின்று. ஆஸ்திகர் கொள்கைப்படி கடவுள் இருப்புழி ஆஸ்திகருக்கு சுகமும் நாஸ்திகருக்குத் துக்கமும் பலிக்கு மன்றோ? இதனால் கடவுள் உண்டென நம்புவது பயனுளதெனக் கொள்ளப்படும்.

இங்ஙனமே விதிமதிவிஷயங்களிலும் இருதிறத்தார் ஏற்பட்டிருக்கின்றனர். இதுவிஷயமாக வித்வான்கள் பலர் பற்பலவான கவிகளைப் பாடியிருக்கின்றனர். அவற்றுள்ளும் ஊழ் அதாவது விதியின் வலிமையைப் புகழ்ந்தே மிக்க செய்யுள்கள் காணப்படுகின்றன அவற்றை எடுத்துக்கூற இடம் அமையாது. ஆதலால் எல்லாப் புலவராலும் ஏத்திப் புகழப்பட்ட திருவள்ளுவ நாயனாரது குறளையே ஆதாரமாகக் கொண்டு ஆராய்ந்து ஒருவாறு தீர்ப்பாம்.

“ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி, என்பவை ஒரு பொருட் சொற்கள்.”

"மதி" என்பது புத்தியெனப் பொருள்பட்டு மன வூக்கத்தைக் குறிக்கின்றது. குறளார், ஊழ் என்பதை மூப்பத்தெட்டாவது அதிகாரத்தாலும், மதியை "ஆள் வினையுடைமை யெனும் அறுபத்திரண்டாவது அதிகாரத்தாலும் விளக்கியிருக்கின்றனர் ஒவ்வொரு அதிகாரத்திலும் அதனதன் வலிமையை உள்ளவாறே இயம்பியிருக்கின்றனர். எங்ஙனமெனில் "பேதைப்படுக்கும் இழவூழ் அறிவு அகற்றும் ஆகலூழ் உற்றக் கடை." "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினும் தான் முந்து உறும்" என ஊழின் வலிமையைப் புகழ்ந்தும், தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலிதரும்', "ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித் தாழாது உற்று பவர்" "பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து ஆள்வினையின்மை பழி" என மதியைப் புகழ்ந்தும் கூறியிருக்கிறார். இவற்றின் கருத்து வருமாறு:—கெட்ட விதிவருங்கால் உள்ள அறிவு மழுங்கும் நல்லவிதிவருங்கால் அந்த அறிவு விசாலப்படும், 'எவ்வளவு ஆலோசனை செய்தபோதிலும் ஊழினுக்கு மிஞ்சின வலிமை கிடையாது அதுவே முன்தோற்றும், என் ஊழின் பக்கமும்; பூர்வ பாக்கியத்தாற் கிடைப்பதற்கு உரிமை பெறுதலையும் முயற்சி கொடுக்கும்; விதியில்லைம பழிக்குட்படாது, முயற்சியின்றி யிருத்தல் பழிக்குப் பாத்திரமாகின்றது என முயற்சியின் பக்கமும் சேர்ந்திருக்கின்றனர். இவ்விரு பக்கத்தையும் அவர் சமமாக ஆதரித்திருப்பதுபோற் றோற்றினும் அவர் "பொறியின்மை" யெனும் குறளால் மதியையே சிறந்ததெனக் கொண்டிருப்பதாக விளங்குகின்றது.

ஓர் கர்மத்தைச் செய்யுங்கால் அதன் பயனை நாம் அறிவினுட்கெட்டின வரையில் நிதானிக்கலாமேயன்றித் தீர்மானமாக வரையறுத்தல் கூடாது. நிதானித்தபடி முடிவு பெறுவது சிலதும் தவறுவது சிலதுமாக நம் அனுபவத்திற்காண்கின்றனம். தவறின விஷயங்களில் நமது புத்தியை மற்றோர்வழியிற் செலுத்தியிருந்தால் சித்திபெற்றிருக்கலாமெனத் தோன்றுகின்றது. இரண்டு வழி யேற்பட்டிருப்ப, ஒன்றைத் துணியாது மற்றொன்றைத் துணிந்ததற்குக் காரணம் யாதென ஆராயுங்கால் காரணம் தெரியாவிடத்து அதிருஷ்டம்! எனக்கூறுவாம். அதிருஷ்டம் எனுமொழிக்குப் பொருள் "பார்க்கப்படாதது" என்பதே. அகஸ்மாத் என்று சொல்வதுமுண்டு. அதன் பொருளாவது "கஸ்மாத்" எதிலிருந்து! "அகஸ்மாத்" எதிலிருந்தென்பதில்லை எனவே வெற்றி தோல்விகளுக்கு மூலம் இனையதெனத் தெரியக்கூடவில்லை யென்பதொரு பொருளாம். இதனையே விதியென்பர்.

தமிழ் நூலாராய்ச்சி.

பிங்கல் நிகண்டு.

மகாகனம் கார்த்திகேய முதலியார் என்பவர் பிங்கலநிகண்டிலே, இப்பத்திரிகை ஒன்றிலே, முன்னர் நாம் காட்டிய திருத்தங்களை அங்கீகரியாது மறுத்துரைப்பாராயினர்.

1. முதலியார் "உதவகன் என்பது இருபீடயோனி யென்னும் பொருளும் பயக்கும் அஃது உதகவன் என நிலை மாறியதெனலுமாம்" என்றார்.

உதவகன் என்பது நெருப்பின் பரியாய நாமங்களுள் ஒன்று என்பது வடமொழி நிகண்டுகளாலும் அபிதானிகங்களாலுந் துணியப்படும். ஓமஞ் செய்தவைகளைத் தாங்குபவன் என்பது அதன் பொருள். அது தமிழ்ப்பாஷையிலே உதவகன் எனத் தற்பவமாக வழங்கப்படுகின்றது. சேதுபுராணம் சங்கர பாண்டியச்சருக்கம் ௯௫. "உன்னினுன்னுடலை யினனே யுதவகற் குதவல் வேண்டும்" என்புழியும், நல்லவெண்பாவிலே "பஞ்சாயுதவகன்போல்" என்புழியும் உதவகன் எனப் பிரயோகிக்கப் பட்டிருத்தல் காண்க. இருபீட யோனியென்பது நீர்க்குப் பிறப்பிடம் என்னும் பொருள் பயக்கும். இருபீடம்-நீர்-யோனி-பிறப்பிடம். உதகவன் என்பதில் அப்பொருள் தோன்றுதற்கிடமுண்டா? நிலை மாறியதாயின் அவ்வாறு வழங்கப்பட்ட நூற்பிரமாணம் யாது?

2. முதலியார் "கூடசதுர்த்தம் என்பது தமிழ்நடைக்குப் பொருந்தக் கூடசதுக்கமெனத் தற்பவமாயது" என்றார்.

கூடசதுர்த்தம் என்பது தமிழ் நடைக்குப் பொருந்தாமைக்கு நியாயம் யாது? சதுர்த்தமென்று வழங்குதல் தமிழ் நடையிற் காணவில்லையா? கூடசதுர்த்தம் என்பது நான்காமடியில் வருமெழுத்துக்கள் முன்னையடியில் மறைந்து நிற்கப் பாடும் ஒரு சித்திரகவி யன்றோ? அப்பொருளை யடக்கியே வடமொழித் தண்டியாசிரியரும் கூடசதுர்த்தம் என்றார். சிசுபாலவதத்திலே இறுதிச்சருக்கத்திலே உரையாசிரியரும் கூட சதுர்த்தம் என்றார். கூடம்-மறைவு. சதுர்த்தம்-நான்காவது. கூடசதுக்கம் எனக் கொண்டவர் யாவர்? சதுர்த்தமும் சதுக்கமும் ஒரு பொருட்கிளவிகளா? சதுக்கம் என்பது நான்காவதெனப் பொருள்படுமா? சதுர்த்தம் என்பது சதுக்கம் எனத் தற்பவமாகுமா? அர்த்தம் என்னும் வடமொழி தமிழில் அர்க்கம் எனத் தற்பவமாகுமா?

3. முதலியார் "ஆபகம் என்பது ஆபதகம் எனவுமாகும். வருடகம் வருண்டகம் வாருண்டகம் எனவும் கடசம் கொட்சமெனவும் விஞ்ஞானம் விஞ்ஞாபனம் எனவும் ஆதல்போல்" என்றார்.

ஆபகா என்னும் வடமொழி யாற்றின் பெயர்களுள் ஒன்றென்பது வடமொழி நிகண்டுகளாலும் அபிதானிகங்களாலும் பெறப்படும். சிசுபாலவதகாவியகாரரும் "மலையாறு" என்னும் பொருளில் "நகாபகா" என்றார். நக-மலை, ஆபகா-யாறு. அது நீ

ராத் செல்வது எனப் பொருள்படும். தமிழில் ஆபகை எனவரும், தமிழ் இரகுவமிசத்திலும் "ஆபகையெனப்பெருகி" எனக் கொள்ளப்பட்டது. பிங்கலசெண்டு அச்சிட்டவர் இவ்வுண்மையறியாது ஆபதகை எனத் தவருக அச்சிட்டார். வெவ்வேறு முடிபுடைய வருடகம் முதலிய சொற்கள் ஆபதகை என்பது வழுவற்றது எனத் தாபிக்க வல்லனவோ?

4. முதலியார். "உருவரை உருவரி என்பதன் திரிபு" என்றார்.

நன்னிலம் எனப்பொருள் படுகின்ற "உர்வரா" என்பது தமிழ்ப்பாஷையில் உருவரை எனவரும் அவ்வாறே சூடாமணி நிகண்டில் "அனைத்து முண்டாகும் நிலத்தின்பெயர்-உருவரை" எனப் பிரசுடனஞ் செய்யப்பட்டது. பிங்கல நூலச்சிட்டவர் இதனையறியாமல் அனைத்துமுண்டாகும் நன்னிலத்தின்பெயர்-உருவரை என்றார். உருவரை என்பது வழுவற்றது என்பதற்கு உருவரி என்பதன் திரிபு என்பது பொருந்துமா. உருவரி என்பதன் பொருள் என்னை?

5. முதலியார் "ஆக்கள் விரவலால் ஆவிரமெனவும் அவை நெருங்குதலான் வல்லி. வல்லியமெனவும்.

6. திரட்டப்படலால் ஐயமெனவும் கலத்தாலாக்கப்படலால் கவீனம் எனவும் பொருள்பட்லின் ஆவீரவல்லி ஐயங்கவீனம் என்பன ஒரு மொழியல்லவாம்" என்றார்.

"ஆவீரவல்லி" என்பது இடைச்சேரியின் பெயரென்பதும் "ஐயங்கவீனம்" என்பது வெண்ணெயின் பெயரென்பதும் அமரகோஷத்திற்பெறப்படுகின்றது. ஆவீரவல்லி என்பது இடையர்குடியெனவும், ஐயங்கவீனம் என்பது நேற்றைப் பசுப்பாலிலுண்டானதெனவும் பொருள்படும். சூடாமணி நிகண்டுகாரர் வெண்ணெயென்பர். மேலும் வடமொழி இரகுவமிசத்து முதற் சருக்கத்திலும் காணப்படுகின்றது. முதலியார் கூறுமாறு ஆவீரம் என்பதும் வல்லி என்பதும் இடைச்சேரி எனவும் ஐயம் என்பதும் கவீனம் என்பதும் வெண்ணெயெனவுங் கொள்ளுதற்குப் பிரமாணம் யாது?

7. "கைரிசம்" என்பது செக்கல்லையுணர்த்துமென்பது அமரநிகண்டினாலும் சூடாமணி நிகண்டினாலும் பெறப்படும். இதனைப் பிங்கலநூலச்சிட்டவர் "காரிகம்" எனக்கொண்டார். காரிகம் என்பதைத் தாபித்தற்கு முதலியார் கூறியவைகட்குப் பிரமாணங்காட்டக்கடவர்.

8. முதலியார் "நாடென்றும் பொருளுணர்த்தும் சீமம் சீமை என்பன எல்லைக்கு ஆகுபெயராகிவந்தன சிம் அவற்றிற்கு முதனிலை" என்றார் சீமம் என்பது எல்லையின் பெயராதலை வடமொழி நிகண்டுகளும் ஆபிதானிகங்களும் காண்பிக்கும். சிம் என்பது எல்லையையுணர்த்தற்கும் முதனிலையாய் நிற்றற்கும்பிரமாணம் யாது?

9. முதலியார் "பிறப்பு விறப்பு என்பன ஒரு பகுதியினின்று பிறந்துள்ளன" என்றார் பிறப்பும் வேறே. விறப்பும் வேறே. பிறப்பு என்பது உற்பத்தியையும் விறப்பு என்பது நெருக்கத்தையு முணர்த்தும். இரண்டுமொருபகுதியினின்று பிறந்ததாயின்; அப்பகுதிதான் யாது? "விறப்பு முறப்பும் வெறுப்புஞ் செறிவே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தையும், "வித்தநிலத்தின் வெறுத்த பயிர் விறப்பினீங்க" என்னுந் தணிகைப் புராணத்தையுங் கண்டு விறப்பு பிறப்பின் வேறெனவுணர்க.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிபிள்ளை.

அன்றியும், ஆலயங்களிற் செய்யப்படுகின்ற அலங்காரங்களும், ஆராதனையில் நிகழுந் தூப தீபங்களும் அக்காலத்திற் கமைந்த வாத்திய கோஷங்களும் அன்பர்களின் இருதயத்தில் ஆனந்தத்தை யுண்டாக்கி ஆனந்தவடிவமாகிய அறிவினை ஆராய்ந்து தியானிப்பதற்கு அனுகூலமான சாதனங்களாகின்றன. ஆயின் ஆனந்தமே பயனாகக்கொண்டு மேற்கூறிய அலங்காராதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன வெனின் அப்பலைகளின் நடனமும் அவ்வாறேயா மன்றோ. அங்ஙனமாகவே வியபிசாரிகளாகிய தாசிகளின் நடனமும் அங்கீகரிக்கத்தக்கதா மன்றோவெனின், அஃதன்று. அனுபவத்தால் ஆய்பவரின் ஆராய்ச்சியில் அங்ஙனம் அறியக்கூடவில்லை. எவ்வாறெனின் அலங்காராதிகளாற் பிறக்கும் ஆனந்தத்திற்கும் அப்பலைகளாகிய வியபிசாரிகளைக் காண்டலால் எழும் ஆனந்தத்திற்கும் வேறுபாடு பெரிதும் காணப்படும். முன்னையது சாத்விக குணாம்சம்; பின்னையது தமோ குணாம்சம்; முன்னையது சத்யம், சாந்தம், தயை முதலிய நற்குணங்களை ஜனிப்பித்தற்குச் சாதனமாகின்றது; பின்னையது காமக்குரோதமுதலிய துர்க்குணங்களுக்குக் காரணமாகின்றது. இவ்வாறிருப்ப, ஆன்மாக்கள் உய்வது கருதி யருளிய ஆகமங்களில் இத்தகைய ஆசார ஹீனமான நடைகள் ஏற்பட்ட காரணம் யாதோவெனின், ஆகமங்களிற் சொல்லின தாசிகளெனும் அடியார்களின் இலக்கணத்திற்கும் அனுஷ்டானத்தில் நடைபெற்று வருகிற வியபிசாரிகளின் ஒழுக்கத்திற்கும் பேதம் பெரிதும் காணப்படும். ஆகமானுசாரிகளாகிய தாசிகளைக் காமஇச்சையாற் பார்ப்பவன் தன்தாயைப் புணர்ந்த பாவத்துக்குள்ளாவன் எனப்படுகின்றது. அங்ஙனமாயின் அதிபாதகங்களுக்கு உறைவிடமாகிய வியபிசாரமுள்ள போலித் தாசிகளை ஆலயங்களுக்குட் புகவிட்டு, அவரது ஆட்டத்தைக்கண்டு மகிழ்ந்து புகழுமாறு செய்வரோ பெரியவர்?

நண்பர்காள், சமய அருமைக் குழந்தைகளுக்கு நல்லொழுக்கத்தையே பயிற்றுவிக்கும், தந்தைகாள், சமய சீடர்களுக்கு சாத்வீக குணத்தையே புகட்டும் ஆசிரியர்காள், தத்துவ ஞானத்திற் சிறந்து உலகெங்கும் புகழ்ச்சிபெற்ற சாதுக்களின் சந்ததிகாள், தர்மத்திற்கேன்றே கங்கணம்பூண்டு, ஆலய அனுஷ்டானங்களைப் பழுதற ஆராய்ந்து நடத்துந் தலைமைபூண்ட தர்மகர்த்தர்காள், காம இச்சையை வரையறக் கடியுமாறு சிறு நூல்தொடங்கி பெருநூல் வரையுள்ள பனுவல்களால் மிகுதியும் பறையறைகின்ற நமது பூர்வமுனிவர்கள், ஒழுங்கற்ற காம இச்சையைக் காதலித்து வளர்க்கின்ற கணிகையரது கூத்தைக் காமனை முனிந்த கடவுளர் முன்பில் நடைபெறவிடுவரோ என்பதை நன்கு ஆராயின். ஆனால் தேவதாசிகள் தாம் யாவரெனின், மனத்துறவால் மணஞ்செயாத நைஷ்டிக பிரமசாரியாகிய ஆடவரைப்போலத் தேவனையே நாயகனாகக்கொண்டு, அவனுக்கே பொட்டுக்கட்டி அவனுடைய திருத்தொண்டையே செய்துவருபவர் என ஒருவாறு கூறலாம். ஆகவே அத்தேவதாசிகள் தெய்வ பக்தர்களுக்குத் தாயாகிய முறையில் நிற்கின்றனர். இவ்விஷயத்தை வேறோர் சமயம் பெருக விரிப்பாம்.

இதுநிற்க ஹிந்து மதத்தார் வணங்கும் தேவர்கள் பல வகையினராகின்றனர். அத்தேவர்களது சில லீலைகளைக் கவனிக்குங்கால், அவ்வன்பர்களுக்கு இயல்பிலேயமைந்துள்ள நன்னெறியுங் கெடுமென்று கூறலாம். ஆனால் தேவர்களைப் பல ரூபமாக்கிய காரணமானது தத்துவ சாஸ்திரத்தில் விளக்கிய சில குண உருவங்களாகக் காணப்படுகின்றது. அதனை மறந்து தமோ குணத்துக்குரிய தேவர்களது லீலையை யெடுத்துக் கூறுங்கால் தமோகுணமுள்ள மிருகங்களின் செய்கைகளையும் அத்தேவர்மீது ஏற்றி விரிவான கதைகள் வரையப்பட்டுள்ளன. அக்கதைகளை வெள்ளறிவினர் ஆசானின்றிக் கற்கப்புகில் அவருக்குரிய நல்லொழுக்கத்தை மாற்றித் தீயொழுக்கத்தை ஊக்கப்படுத்தவுங் கூடும். இவ்விஷயத்தின் உண்மையைப் புராணங்களைப்பற்றிப் பேசுங்கால் விவகரிப்பாம்.

இவ்வாறு கோயில்களில் நடைபெறுகின்ற சில அனுஷ்டானங்களும் அவற்றிற்கு மூலமாகிய கதைகளும் முறைபிறழ நிகழ்வன காணப்படும். அவற்றிற் பெரும்பான்மையும் பிற்காலத்தார் பூர்வீகர் கருத்தையுணராது, ஒருக்காலுணரினும் சுயநயம் பற்றிப் புகுத்த புன்னெறியாகின்றன. அவற்றை ஆராய்ந்து அநாசாரங்களை யகற்றி அநுஷ்டித்தல் அறிஞரது கடமையாம், அங்ஙனமின்றிக் குறைகூறத் துணிவது சிறியர்செயலாகமுடியும்.

மனதானது ஓர் நிலைமையைப் பெற வேண்டுமேல் வைகறையில் துயில் நீங்கி, ஸ்நானஞ்செய்து, நந்தனவனம் சென்று மலர் கொய்து, தாம்வழிபடுகடவுளுக்குப் புனைந்து அவரைத் துதித்து வணங்கல்வேண்டும் என்பதற்கு—“நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்—புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்த்து பாடித்—தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா போற்றி போற்றி யென்றும்—அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதியென்றும் ஆரூரா என்றென்றே அலறா நில்லே” எனத் சைவ சமயாசாரியார் மூவரில் ஒருவராகிய ஸ்ரீ அப்பர் சுவாமிகள் அருளிய தேவாரமே நிகழ்கின்ற சான்றாம். ஆகவே நம் பெரியர் விக்ரஹ ஆராதனை செய்பவரின் மனந் தூய்மையாதற்க உபாயங்கண்டு அதனை ஊக்கப்படுத்தியிருக்கின்றனரேயன்றி அதற்குரிய நூல்களில் எங்கேனும் காமக் குரோத லோபாதிகளைக் கைக்கொள்ளுமாறு கருதினார் இலர்.

எனவே, இவ் உபந்யாசத்தால், மனமானது நினைப்பதற்கு இலக்காகிய ஓர் வடிவம் வேண்டற்பாலதென்றும், ஆஸ்திகர் பிரலோகத்தில் கடவுளுக்கு மூர்த்திதலம் கற்பித்திருப்பதால் அதனைத் தியானித்தற்கு உரிய வடிவமாகிய விக்ரஹம் இன்றியமையாததென்றும்; ஹிந்துக்கள் புரியும் அவ்விக்ரஹ ஆராதனையானது சரீரசுத்தியையும் மனத்தூய்மையையும் பயக்கத்தக்கதாகின்றதென்றும்; அவ் ஆராதனையின் நடுவே கலப்புற்ற சிற்சில குறைபாடுகள் பிற்காலத்தில் வந்தனவேயன்றி பூர்வ சாஸ்திரங்களில் விதித்தன வல்லவென்றும்; இடையிற் பரவலான நடைமுறைகளை யகற்ற முயல்வது தற்காலத்து அறிஞர் கடமையென்றும் ஒருவாறு முடித்தாம்.

முற்றும்.

ஆருவது அத்தியாயம்

சீராளனும் தேவராட்டியும்.

கோபியண்ணு விடம் விடைபெற்றுச் சீராளன் சரேலென அவ்விடம் விட்டுப் புறப்பட்டு மிகவிரைவாய் நடந்துபோய்த் தேவராட்டியிருக்கும் வீட்டையண்மினன். போகும் வழியிற் பலர் தேவராட்டி தமக்கன்று செய்திட்ட உதவிகளையும் கூறிவிடுத்தநன்மொழிகளையும் பலவாறு புகழ்ந்துரை பகர்ந்து வருவதைக் கேள்வியுற்று மனமகிழ்ந்தனன். இத்தகையுடையாள் சிறந்தோர் மாதாகவேயிருத்தல் வேண்டுமென மனதிற் பதித்துக் கொண்டனன். இவன் அங்குச் சேறலும் தேவராட்டி வெளிக்கொள்ளாது மொத்திருந்தன. ஆயினு மிவன் வாயிற்படியினிற் றலைக்கண்டவுடன் தேவராட்டி சரேலென்று உட்குந்து விளக்கைத் தூண்டிவிட்டு இவனை யுட்புகும்படி சாடைகாட்ட இவன் உட்புகுந்தான். இதற்குள் தேவராட்டியுந் தனது திசவுருவத்தை யிவன் காணுதிருக்கும்படித் தானணியும் போர்வையுடைகளை யுடுத்துக்கொண்டு இவன் முன்னினறனள். இவளைக் கண்டு சீராளன் சிறிது அச்சங் கொண்டவன்போல் இரண்டு மூன்றடி பின்வாட்டு மிகவும் ஒடுக்க வணக்கத்துடனிரு கரங்களையுங் கட்டிக்கொண்டு நிற்பதைக் கண்டு "நீயாவன்? உன்மனக்கவலையாது? கூறுதி" என்றுள். சீராளன் இரண்டொரு நிமிஷம் ஒன்றும் பேசாமல் நிற்கத் தேவராட்டி யவனைப்பார்த்து, "பயப்படாதே, நீ வந்தகாரியம் என்ன? அஞ்சாதுரைத்தி" என்றனள். சீராளன் சிறிது ஊக்கம் பெற்று, "மாதே! யான் பதுமபுரிவாழுமோர் மாணுக்கன், தேச சஞ்சாரம் செய்தற்கெனப் புறப்பட்டுளேன்; இச்சுந்தரபுரிக்கு வந்து இன்று மூன்றுநாளாயின; தமது பெருமையையும் ஆற்றலையும் வியந்து இந் நகருறைவோர் அனைவரும் பெரு மகிழ்ச்சியுடன் பேசுகிறார்கள்; ஆதலின் யானுந் தம்மைக் கண்டு என் குறைகளைக் கூறி அவற்றிற்குப் பரிகாரம் பெற நினைந்திங்குப் போந்தனன்." என்றன். இவனதினிய மொழியைக் கேட்ட தேவராட்டி, உனக்குற்ற குறையாதெனக் கூறுதி என்றுள்.

சீராளன்—"யானோர் மாணவகனாலின் எனக்கொரு குறையும் நேரிட்டிருப்பதில்லை. ஆயினும் என்னுடன் ஒரே கல்விச்சாலையில் கற்றவனும், இணையிலாவனப்பும், விரித்துரைக்க முடியாத ஆற்றலும், வரம்பிலாக்கலைத் தேர்ச்சியும், கோடாவொழுக்கமும் உடையனும் ஓர் தோழனெனக்குளன். அவன் ஓர் அரசன் பெற்ற வருஞ் செல்வன். கல்லூரியில் நாங்களிருவரும் ஒரேவகுப்பு மாணுக்கர்களாயிருந்தோம். அவனால் எனக்குக் கிடைத்திருக்கும் நன்மைகளையில்லை.

யாங்களிருவோரு மோருயிரு மீருடலுமாக வளர்ந்து வந்தோம்; எனது பிதா அவனுடனென்னையுஞ் சேர்த்துத் தேசயாத்திரை செய்துவருமாறனுப்பினர்; எனக்குத்துணை ஒரு வீரன் என்து தோழனுடன் போந்தவர் பதின்மர்; ஆக நாங்கள் பதின்மூவருஞ் சேர்ந்து தேசயாத்திரை தொடங்கிச் சிறிது வழிகழித்துப் போரூர் எனும் ஒரு சிற்றரசு நாட்டையடைந்து அங்குச் சிறிதுகாலம் வதிந்தோம்; ஓர் நாள் அந்நாட்டில் ஒரு பெருங் குழாங் கூடிற்று; அக்குழாத்திற்குப் பற்பல தேயத்திலிருந்தும் பற்பல கலைவல்லோர்கள் வந்தனர்; அன்று அங்கு ஓர் பெரும் பிரசங்கம் நடந்தது; அப்பிரசங்கங் கழிந்தபின்னர் அவைக்கண் அவயவிகளாயிருப்பவர்களும் பிரசங்கத்தைக் குறித்து அவரவர்க்குத் தோன்றிய அபிப்பிராயங்களைப் பகர்ந்திட்டனர்; பின்னர் சபையிலிருக்கு மேனையோர்களினபிப்பிராயங்களுங் கேட்கப்பட்டனவால் எனது நண்பனெழுந்து தன்னபிப்பிராயங் கூறினன்; அன்றச் சபையிற பேசிய பல வித்வான்களையுந் தலைகுனிந்திருக்கும் படியாய்ச் சொற்சுவை பொருட்சுவை அபிநயச்சுவை முதலிய எல்லாச்சுவையும் அமைந்து எனது நண்பன் செய்த பிரசங்கத்தைக் கேட்ட அந்நாட்டுச் சிற்றரசன் மிக்கு மனங்களித்து எனது நண்பனைத் தனியிடத் தழைத்துச் சென்று அவனுக்கு வேண்டிய பரிசுகளளித்து அந்நா முதலவனைத் தன் அரண்மனையில் வைத்து ஆதரித்து வந்தனன்; அவனுடன் சென்ற எங்களுக்கும் அவ்வரசன் முறைதவறாது வேண்டிய வேண்டியாங்களித்து எங்களையு முபசரித்து வந்தனன்; இப்படிச் சிலநாட் கழிந்தன. பின்னர் ஓர்நாள் அச்சிற்றரசன் எனது நண்பனை அழைத்துத் அவனைத் தனது மகளாகிய சாரதைக்குக் கடிமணம் புரிவிக்க நினைந்து அவனிடம் தன் கருத்தை வெளியிட என்னண்பன் அதற்கிசைந்திலன்; தன் தந்தையின் அநுமதியின்றித் தானெவரையு மணத்தல் நீதியன்றென்றும், தந்தை சொன்மிக்க மந்திரமில்லை யாதலின் அவரிடமிதனையுரைத்து அவரிசைந்தாலன்றி யவ்வாறு மணவினை முடிக்கத்தான் உடன்படல் தகுதியுடைத்தன்றென்றும் கூறினன்; "ஆயின் உன் தந்தையார்? அவரெங்குளர்? அவர் வரலாறென்னை? எனக் கேட்க அவன் விடுத்த விடை போரூரரையன் செவியிற் புகலும் அவன் தன் தலையாரியை யழைத்திவனை யிப்பொழுதே சிறையிலடைத்திடுதி என்று கட்டளையிட்டனன். இதைக் கேட்டு நாங்களுமுடன் அவ்வூரைவிட்டுப் போனோம்; அவன் சிறைப்பட்டு உத்தேசம் வருடம் ஒன்பதுக்கு மேலாயிற்று. அன்று தொட்டு நானு மென்

மெய்க் காவலனுமாய்ப் பல தேயங்க
ளெய்போய் அவ்வரசகுமாரன் சிறை
மீண்டுவந்தனனே இலனே எனவறி
ய முயன்றும் அவனைப் பற்றியிதுகாறு
மெமக்கொரு செய்தியுமறிய வழியி
டைக்கவில்லை; இதுவே என்மனத்துற்
ற கவலை; நீவிர் வருங்கால நிலையறிந்
து கூறும் திறனுடையீர் எனப்பலரு
மும்மைப் புகழ்ந்துரைக்கின்றமையா
ல் யானும்மிடம் வந்தேன்; இதற்கு
உபாயமெனக்குச் சொல்லியனுப்புதிர்"
என்றான். இவனுடைய உடலமைப்
பையும் வனப்பையும் இனியகுரலையும்
முகபாவத்தையுங் கண்ட தேவராட்
டியின் மனத்திட்பஞ் சிறிது குலைந்த
து. தேவராட்டியிவனைத் தலை முதற்
கால் வரையும் நன்கு கண்ணுலைந்து
பார்த்துக்கொண்டே யிருந்தனள்; இ
வனது காம்பீரியமும் ஆங்காங்கு வெ
ளிப்பட்டச் சிற்றக்குறியும். கடைப்பி
டியும் அவள்மனதைக் கவர்ந்து கொ
ண்டன. நாண மென்பதின்ன தென
அது காறும் அறிந்திராதவளுக்கு அவ்வு
ள்ளியக்க மன்றுண்டாகிச் சிறிது அ
வள் மனவூக்கத்தை யழித்தது;' இவ
ரிடத்தில் யானெங்ஙனம் பேசுகிறது;
இவனோர் அரசகுமாரனாயிருக்கவேண்
டும்; இவனிதுவரையும் சொல்லிவந்
த செய்திகள் எனக்குச் சில சந்தேக
ங்களை வளர்க்கின்றன; இவனொருத்
தமபுருடனுக்குரிய வனப்பும் பண்பும்
வாய்க்கப் பெற்றவனாகக் காண்கின்ற
னன்; இரண்டாடவர்களிங்ஙனம் நே
சத்தாற் பிணிப்புண்டிருத்தல் கூடுமெ
ன்பதை யின்று தான் நானறிகின்றே
ன். தன்னன்பனை விட்டுப் பிரிந்து ஒ
ன்பது வருஷங்களாயின வென்றும்
அவனைத்தேடி இவ்வொன்பது வருஷ
ங்களாய்த் திரிகிறேனென்றுங் கூறினர்;
இஃதோர் அருங்காட்சியே; இவருட
ன் பேச எனது நாவெழவில்லை; மன
திலச்சமும் நாண முண்டாகின்றன;
ஒன்றும் பேசாதிருப்பேனாகில் இவர்
மனக்கவலுறும்; இவர்தனது கவலை
க்கு இறுதிக்காணக்கருதியன்றோ இ
ங்குவந்திருக்கின்றனர்; அக்கவலையை
மாற்றுதற்கு யான் முயல்வதை விட்
டு அவர் கவலையைப் பெருக்குவது
பெரும் பாவமன்றோ? ஆதலால் மன
தைத் திடப்படுத்திக் கொண்டு அவரி
டம் யான்பேசி யவர்வாய்ச் சொல்லை
த் தூண்டி யவர் மனத்திருக்கும் கரு
த்தை வெளிப்படுத்துவேன்" என்று
நிச்சயம் செய்துகொண்டு சீராளனை
நோக்கி.

தேவராட்டி.—" இச்சுந்தர புரிக்குவந்
து மூன்றுநாள் தாமாயினவோ?

சீராளன்.—" ஆம்! அம்மணி.

தேவரா.—" என்னை இன்னானென்ற
றிந்தீர்கண்டு போகலா மென்று
வந்தீர் போலும்"

சீரா.—"அன்ற! தம்மிடங் கேட்டால் எனது நண்பனுயிருடனிருக்கின்றானோ அல்லது இறந்துபட்டானோ என்பதை யறியலாமென்ற நோக்கத்துடன் வந்தேனேயன்றித் தம்மையின்னாரென்றறிந்து கொள்ளற்கு வந்தவனல்லன்'

தேவரா.—"இந்நாட்டிற் பலர் இராமாறு இங்குவந்து என்னிடங் குறிகேட்டுச் செல்லுகிறார்கள். ஆயினுஞ் சிலர்யான் சொல்லுங் குறியில் நம்பிக்கை யற்றவராய் என்னுடைய உண்மையான நிலைமையைக் கண்டுபிடித்து என்னை வெளிப்படுத்த நினைத்து வருபவர்களுமுளர்."

சீரா.—"யானவ் வகுப்பிற் சேர்ந்தவனல்லன்; எவர் எத்திறத்தினராயினு மாகுக; எனக்கு ஒரே கவலையுளது; அக்கவலைக்கு ஆறுதல் எங்ஙனம் உண்டாகுமென்று கண்டு கொள்வதே என் கோட்பாடாம்."

தேவரா.—"உம்கவலையை மாற்றற்கெனக்காற்ற லுளதாயின் யான் உமக்கு வேண்டிய துணைபுரிவேன்; ஐயுற வேண்டாம்; உம்பெயரென்ன? உம்மைப் பெற்றதாயின் பெயரென்ன? உம் தந்தை யாவர் எவர்? கூறுவீர்."

சீரா.—"தேவராட்டியாகிய உமக்கு என் தாய் தந்தைகளின் பெயர் அறிதாக வேண்டியதென்ன? என் கவலையைத் தீர்ப்பதற்கு [illegible]க மருந்தும் மிட்டு முளதாயின் கூறிவிடுக; இன்றேல் யான் போகின்றேன்."

தேவரா.—"உம்பெயர் என்னென்றுவது சொல்லும்; குறிகேட்க வருவோர் இங்ஙனம் வாதாடுவதை யானிதுகாறுங் கேட்டறியேன்; கேட்ட கேள்விகளுக்கு உண்மையான விடையளித்தாலன்றி யெங்ஙனம் நிவிர்த்தி வழி வெளிப்படும்? உம்வாய்ச் சொல்லைக் கொண்டன்றோ யான் குறி வெளிப்படுத்த வேண்டும்."

சீரா.—"ஆயினுமக்கு மற்றுள்ள சோதிடர்களுக்கும் யாது வேற்றுமையுளது; அவர்களு மாறுடன் கூறுவேன் என்று வேடம் பூண்டு, வருபவன் கேட்குங் கேள்வியின் முதலெழுத்தை யடித்தானமாக வைத்துக் கொண்டும் அவன் நிற்கும் நிலையையும் நோக்குந் திசையையும் பார்க்கும் பார்வையையும் பக்கத்திலிருந்துண்டாகும் சொற்களையும் துணைக்கருவிகளாகக் கொண்டு, தோன்றியது நிகழ்கலைக்கிளம் என்றும், வியாழனெட்டாமிடத்தில் புறப்பட்டு நின்றுளாராயிற் றென்றும்

காசாதுரிய மாதுரியமாகக் கேட்போர் செவிக்கும் மனத்திற்கும் இன்பமும் பயனும் பயக்குமாறு, நியாயவிருப்பணங்களுடன், பல மேற்கோள் சகிதம் எடுத்து நான்கு பிரசங்கிக்கப்பெற்றது. விஷய அருமையும் உபந்நியாசப் பெருமையும் யாம் பெரிதும் வியக்கற்பாலனவாயின. இக்குருமூர்த்திகள் இவ்வரியநூலை அச்சியற்றி அதனைப் பெறற்குரிய பக்குவர்க்கு உபகரித்துப் பயன் பெறச்செய்யின், அஃது இக்காலம் நாகரிகத்தை யநுசரித்து உலகிற் கியற்றிய பேருதவியாகும். இம்மூலபாஷிய மகிமையும் உலகிற் பிரசித்தியாய்த் தமிழுலகிற்குப் பெருமையும் பயக்கும்.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்.

இத்தமிழ்ச் சங்கத்தாருடைய இவ்வருடப் பரீட்சையிலே சித்திபெற்ற மாணவர்கட்குப் பட்டத்தோடு பரிசு கொடுத்தற்காக இந்த மார்கழி மீ [illegible] வியாழக்கிழமை இரவு வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே ஒரு பெருஞ்சபை கூட்டப்பட்டது. போலீஸ்கோட்டு நீதிபதி ஸ்ரீமான் தம்பு அவர்கள் அக்கிராசனபதியாயினர். பட்டமும் பரிசுங் கொடுத்தபின் சங்கத்தலைவராகிய ஸ்ரீ த. கைலாசபிள்ளையவர்கள் சங்கவரலாற்றை வாசித்தார். அப்பால் ஸ்ரீ இலங்கைநாயக முதலியார், ஸ்ரீ சந்திரசேகரர், ஸ்ரீ நாகலிங்கம்பிள்ளை, ஸ்ரீ சிவலிங்கம், ஸ்ரீ சு. சரவணமுத்துப்பிள்ளை, ஸ்ரீ கு. குமாரசுவாமிப் புலவர் முதலிய பலருந் தமிழ்ப்பாஷையின் பெருமையைக்குறித்துப் பிரசங்கித்தார்கள். அதன்பின் அக்கிராசனாதிபதி தமிழ்ப்பாஷையின் மகத்துவத்தை மிகவும் விரித்துப்பேசினர். குருமார், பண்டிதர், பிரபுக்கள், அதிகாரிகள் முதலிய பலருஞ் சபையோர்களாயினர். இச்ச

ங்கம் விருத்தியடையும்படி கடவுள் அருள்செய்வாராக.

இங்ஙனம்,
ஒரு வித்தியாவிநோதன்.

திரிசிரபுரம்.

நாளது மீ 26உ ஞாயிறு மாலை 3 மணி முதல் 6 மணி வரை திரிசிரபுரம் மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில், சைவ சித்தாந்த சபை ஆதரிப்பின்கீழ், அறிவுவிளக்கம் பத்திராதிபர், ஸ்ரீமத் வள்ளல், சோ. சிவஞானதேசிகஸ்வாமிகளால், “தாத்காலிக சைவாசாரநிலை” என்ற விஷயம் பிரசங்கிக்கப்பட்டது. சைவாசாரங்களின் தாற்பரியங்களாம் தற்காலம் அஃது அம்முறை பிறழ்ந்து நடைபெறும் வகையும் அதனைச் சீர்திருத்தவேண்டிய அவசியமும் நன்கு விளக்கப்பட்டன. சபை மிகப் பிரபலமாயிருந்தது. இப்பட்டணத்துக் கனவான்கள் பலர் அங்கு வந்திருந்து பிரசங்க சிரவணஞ்செய்தனர். வந்திருந்த பெரியாருள், திருவானைக்கா, ஸ்ரீமத் ஞானசித்த மூர்த்திகள், டிப்டி கலெக்டர், ஸ்ரீ சண்முகம் பிள்ளையவர்கள், மலைக்கோயில் கம்மிட்டி ஸ்ரீ கங்காதர முதலியார் அவர்கள், விஜயத்துவஜ பத்திராதிபர் யாழ்ப்பாணம், தாமோதரம் பிள்ளையவர்கள், ஸெண்ட் ஜோசப் காலேஜ், நாஷனல் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்கள் முதலியவர்களால் சபை அலங்காரம் பெற்றது. பிரசங்க முடிவில் ஸ்ரீ. தாமோதரம்பிள்ளையவர்கள் எழுந்து உபந்நியாசகருடைய சிறப்பையும் உபந்நியாசப் பொருளையுஞ் சுருங்க எடுத்துவிளக்கி நன்குபேசி முடிவுரைகூறினர். கடைசியில், சித்தாந்த சபையில் காரியதரிசி, ஸ்ரீ. திருஞானசம்பந்தசுவாமிபிள்ளையவர்கள் எழுந்து சிலபேசி உபந்நியாசகருக்கும் மற்றும் வந்து விஜயஞ் செய்திருந்த பெ

...போர்கள் கனவான்கள் யாவருக்கும் ஒத்தனங்கூறப், பின்னர், தேவாரம் [illegible] வையோடு தெய்வம் பராவச்சபை [illegible] கலைந்தது.

இங்ஙனம்,
சித்தாந்த சபையின் ஓர் அவையடி.

திருவானைக்கா.

சோழ நாட்டுச்சிவஸ்தலங்களுட் சிறந்த திவ்யக்ஷேத்திரம். ஸ்ரீ கச்சியப்பஸ்வாமிகளால் புராணம் பாடப் பெற்றது. சிவபிரானுடையே திருமதில் முதலிய எடுப்பிக்கப்பட்டன. தற்காலம் [illegible] பிமானிகளாகிய நாட்டுக் கோட்டைச் செட்டிமாரால் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. யாம் அவ்வாலய தரிசனஞ் செய்து வெளியே புறத்திருமதில் விசேஷங்களைக் கண்ணுற்றவருங்கால், [illegible] தாங் கொண்டைச் சந்நிதியில் [illegible] திருமதிலைச் சார்ந்த அத்திருமதிலையே ஒட்டி [illegible] குப்பைத்தொட்டிகளும், சகதிகளும் அமைந்திட்டிருக்கக் கண்டு கருத்தழிந்தோம். இது அக்கோயில் தர்மகர்த்தாவின் அஜாக்ரதைக் குணத்தைப் புலப்படுத்துகின்றது. சைவாபிமானிகள் அவ்வபசாரங்களைக் கவனிப்பாராக.

தைப்பூச உற்சவம்.—இந்த உற்சவம் நடைபெற சிறப்பாய் நிறைவேறியது. வாகனத்தில் சுவாமியை எழுந்தருளப் பண்ணும்போது மேலே விதானமாகக் குடைபிடித்தலாதல் அவசியம் வேண்டற்பாற்று. அங்ஙனமின்றி சிவாகமவிதிக்கு முற்றுமுரணாய்ச்சுவாமியை எழுந்தருளுவித்தமை எத்துணைப் பெரியதோர் சிவாபராதம். விதிப்படி செய்யவேண்டியவற்றைவிட்டுவாணமத்தாப்புமுதலியவின் வேடிக்கைகளைச் செய்வதால்யாதுபயன்! இவ்வாலய விஷயமாகச் செய்யத்தகுஞ் சீர்திருத்த முறைகளை மற்றொரு முறை நமது பத்திரிகையில் விரித்தெழுதுவாம்.

அத்தியயன பாடசாலை.—புராதன சிவஸ்தலமாகிய இதில் நாட்டுக் கோட்டைச் செட்டிமாரால் வேதாத்தியயன பாடசாலைகள் மூன்று வெவ்வேறாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை ஏற்படுத்தியவர்கள் சிவநேசிதராயும், சிவபக்தராயும், சிவகைங்கரியங்களையே பெரிதும் பேணிவரும் உத்தமோத்தமர்களாயுமிருந்தும், "ஆகமமாய் நின்றண்ணிப்பான் றாள் வாழ்க" என்றும் "வேதங்கள் ஐயாவென வோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" என்றும் [illegible] ஆசாரியராகிய [illegible] வாசகர் [illegible] வேதங்கள் என்றும் சிவத்துக்கு அங்கமாகவும் ஆகமங்கள் [illegible] மாகவும் சாத்திரக் கூறப்பட்டுள்ள அப்பாக்கிய தாரதம்மியங்களை உணர்ந்து [illegible] இன்ற மெய் பயனை இழந்து போகின்றனர் என மிக வியசனிக்கின்றோம். வேத அத்தியயன பாடசாலைகள் [illegible] ர்களை ஏற்படுத்தும் ஆகம அத்தியயன சாலை ஒன்றேனும் அமையாதது [illegible] பெரிதும் பேணற் [illegible] சிவகைங்கரியத்திற்கு [illegible] குறையே. ஆகமங்களின் [illegible] யுணரமாட்டாது பயில்வார் [illegible] சுருங்கிச்சிறக [illegible] ஆங்காங்குச் சிதறிக் கிடக்கும் ஆகமங்களை [illegible] சேர்த்து பக்குவர்க்கு அவற்றைப் பயிற்றுவிக்கல் உத்தமோத்தம சிவகைங்கரியமும், இக்காலத்துக்கு இன்றியமையாத சிவதருமமும் ஆம். இப்பாடசாலை ஒன்றைப் பிரதிஷ்டித்து நடைபெறுமாறு செய்யின் இனிது [illegible] சிவதருமம் ஒன்று [illegible] சிவாகமங்கள் [illegible] அர்ச்சிக்கும் அர்ச்சகர் [illegible] இத்தகைய சிறப்பின [illegible] என்று சிவதருமங்களை [illegible] க்கப் பெறுவது இன்றியமையாதது. இதனைச் சைவப் பத்திரிகை [illegible] நாட்டுக்கோட்டைச்செட்டிமார்களுக்கு அறிவிக்க என்று வேண்டுகின்றேம்.

MAHAMAHOPADHYAYA Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY